**OS.No.224/2010** **D.W.1-**சந்தர் ரத்திணம் **30.01.2026**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி விஜய் என் சகோதரர் என்றால் சரிதான். முதல் பிரதிவாதி சுஜாதா (எ) ரங்கநாதன் என் தாயார் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் வாதியான மணிகண்டன் Star Housings என்ற பெயரில் தொழில் செய்து வருகிறார். என் தகப்பனார் ரத்திணம் ஓய்வுபெய்ய வருவாய் கோட்ட அலுவலராக பணியாற்றினார். நான் 2006 முதல் 2009 வரையான காலக்கட்டத்தில் இந்தியாவிலும், அமெரிக்காவிலும் மாறி மாறி இருந்தேன். 19.06.2006, 31.07.2006 மற்றும் 03.11.2007 தேதியிட்ட உடன்படிக்கைகள் எழுதப்பட்ட காலத்தில் நான் அமெரிக்காவில் இருந்தேன் என்றால் எனது கடவுச்சீட்டின் பதிவுகளைப் பார்த்து தான் தெரியும். என் கடவுச்சீட்டை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். மேற்படி 3 ஆவணங்களும் எழுதப்பட்ட நாட்களில் நான் இந்தியாவில் வசிக்கவில்லை என்றும் அமெரிக்காவில் வசித்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. வாதி காமராஜபுரம், சேலையூர், செம்பாக்கம் ஆகிய இடங்களில் மனைகளை Promote செய்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் ஓய்வு பெற்ற பிறகு தொழில் செய்யவேண்டும் என்று கூறியதால் தயாளன் என்பவர் மூலம் வாதி என் தகப்பனாருக்கு அறிமுகமானார் என்றால் சரிதான். அவ்வாறு அறிமுகமாகி காமராஜபுரத்தில் 3 கட்டிடங்கள் கட்டுவதற்கு வாதி என் தகப்பனாரிடம் ஒப்பந்தம் போட்டார் என்றால் சரிதான். காமராஜபுரத்தில் எவ்வளவு தொகைக்காக ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் குறிப்பாக எனக்கு நினைவு இல்லை. வாதியுடன் என் தகப்பனார் செம்பாக்கத்தில் 2 கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பந்தம் போட்டார் என்றால் சரிதான். அவ்வாறு

செம்பாக்கத்தில் கட்டிடம் கட்ட எவ்வளவு தொகைக்கு எந்த தேதியில் ஒப்பந்தம் போடப்பட்டது என்று எனக்கு தெரியுமா? என்றால் நினைவு இல்லை. செம்பாக்கத்தில் தரை தளத்தில் 1000 சதுர அடி, முதல் தளத்தில் 1000 சதுர அடி கட்டிடம் கட்ட என் தகப்பனார் வாதியுடன் ஒப்பந்ம் போட்டார் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தம் 19.06.2006 அன்று ஏற்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஐ மறுபயனாக ரூ.11,26,000/– காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ரூ.11,26,000/– தரைதளத்தில் கட்டக்கூடிய 1000 சதுர அடி கட்டிடத்திற்கு மட்டும் உரியது என்றால் சரிதான். முதல் தளத்தில் கட்டப்படும் பிளாட் எண்.1A க்கு தனியாக ரூ.11,26,000/–காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தம் 19.01.2006 அன்று ஏற்பட்டுள்ளது. செம்பாக்கத்தில் தரை மற்றும்முதல் தளங்களில்கட்டடிம் கட்டுவதற்கு ரூ.22,56,000/– நிர்ணயிக்கப்பட்டது என்றால் சரிதான். என் தாயார் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் 2 கட்டிடங்களுக்கும் சேர்த்து ரூ.11,26,000/– காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாயார் எதிர்வழக்குரையில் ஒரு கட்டிடத்திற்கு மட்டும் அந்த தொகையை காட்டிவிட்டு மற்ற கட்டிடத்திற்கு வேண்டுமென்றே மறைத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் அடுத்த முறை நீதிமன்றத்திற்கு வரும் போது கடவுச்சீட்டை எடுத்துவரமுடியும்.